

# அனைத்து சர்ச்சைகளுக்கும் பின்னணி சர்ச்சை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோசுவா 5:13–15; ஏசா 37:16; வெளி 12:7–9; உபா 32:17; யாத் 14:13,14; யோசுவா 6:15–20.

**மனன வசனம்:** இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். யோசுவா 10:14.

தேவகட்டளையின்படி தேவநாமத்தில் தேவ உதவியுடன் பயங்கர இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை யோசுவா புத்தகத்தில் வாசிக்கலாம். கானானைப் பிடிப்பதற்கு தேவன் உதவினார் என்கிற கருத்து யோசுவா புத்தகம் முழுவதிலும் காணப்படுகிறது. அப்புத்தகத்தின் வருணனையாளர் அதைச் சொல்கிறார், யோசுவா 10:10,11; தேவன்தாமே அதைச் சொல்கிறார்: யோசுவா 6:2; 8:1; யோசுவா அதைக் குறிப்பிடுகிறார், யோசுவா 4:23,24; 8:7; ராகாப் சொல்கிறாள், யோசுவா 2:10; ஒற்றர்கள் சொல்கிறார்கள், யோசுவா 2:24; மக்கள் சொல்கிறார்கள், யோசுவா 24:18. இந்தப் பயங்கர சண்டைகளை தேவனே துவங்கி வைத்ததாகச் சொல்கிறார்கள்.

இந்த உண்மை தவிர்க்கமுடியாத கேள்விகளை எழுப்புகிறது. தேவன் தெரிந்துகொண்ட ஜனங்கள் பழைய ஏற்பாட்டுக் காலங்களில் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியதை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? பழைய ஏற்பாட்டின் நம்பகத்தன்மை, அதிகாரம், வரலாற்று உண்மை ஆகியவற்றைக் களங்கப்படுத்தாமல், தேவன் 'யுத்த தன்மையுள்ளவர்' போலக் காணப்படுவதையும், அவரது அன்பின் குணத்தையும் எவ்வாறு இணைத்துப் பார்க்கலாம்? உதாரணமாக, யாத் 34:6; சங் 86:15; 103:8; 108:4.

யோசுவாவிலும் மற்ற புத்தகங்களிலும் தேவனுடைய கட்டளைகளின்படி நடந்த யுத்தங்கள்குறித்த கடினமான கேள்வியை ஆராயப்போகிறோம்.

*2025, அக்டோபர் 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கர்த்தருடைய சேனையின் அதிபதி

**கானானைக் கைப்பற்றினதின் பின்னணிபற்றி யோசுவா 5:13–15 என்ன சொல்கிறது?**

---

இஸ்ரவேலர்கள் அப்போதுதான் யோர்தானைக் கடந்து, எதிரியின் பகுதிக்குள்ளாகச் சென்றிருந்தார்கள். எரிகோவின் அரணான மதில்களுக்கு வெளியே நின்றிருந்தார்கள். அதன் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன. யோசுவா 6:1. அந்தச் சமயத்தில் மக்கள் போர் வியூகம் அறியாதவர்களாக இருந்தார்கள். வெகு காலம் முற்றுகைபோட்டாலும் தாக்குப்பிடிக்கக்கூடிய அரணான ஒரு பட்டணத்தை கவண்கள், ஈட்டிகள், அம்புகளால்மட்டுமே இஸ்ரவேலர் எதிர்கொண்டார்கள்.

தனக்குமுன் நின்றிருந்த அறிமுகமற்ற அந்த நபரிடம் யோசுவா கேட்ட கேள்விக்கும் 'இல்லை' என்றுதான் பதில் கிடைத்தது. யோசுவாவின் வரையறைகளுக்கு தாம் அப்பாற்பட்டவர் என்பதையே அவரது பதில் தெரிவித்தது. அதாவது, அவர் யோசுவாவின் பக்கத்தச் சேர்ந்தவரா என்பதல்ல, யோசுவா அவரது பக்கத்தைச் சேர்ந்தவரா என்பதே கேள்வியாக இருந்தது.

**யோசுவா 5:14,15 வசனங்களை 2இராஜா 6:8–17; நெகே 9:6; ஏசாயா 37:16 வசனங்களுடன் ஒப்பிடுங்கள். கர்த்தருடைய சேனையின் அதிபதியினுடைய அடையாளம்பற்றி என்ன அறிந்துகொண்டீர்கள்?**

---

எபிரெய வேதாகமத்தில் வருகிற 'கர்த்தருடைய சேனையின் அதிபதி' என்கிற வார்த்தைகள் தனித்துவமான ஒன்று என்றாலும், 'சேனை', 'அதிபதி' எனும் வார்த்தைகள் இணைந்து வருவது எப்போதும் ஒரு இராணுவத் தலைவரைச் சுட்டிக்காட்டும். வேதாகமத்தில் 'சேனை' என்கிற வார்த்தையானது இராணுவத் துருப்புகள், தேவதூதர்கள் அல்லது வானுலக ஜீவிகளைச் சுட்டிக்காட்டலாம்.

மன்னுருவாவதற்கு முந்தைய கிறிஸ்து யோசுவாவுக்கு ஒரு கூட்டாளியாக அல்லது இஸ்ரவேலின் படையின் தளபதியாகமட்டும் தரிசனமாகவில்லை, கானானியர்களுடனான போரைவிட மிகப்பெரிய போரில் ஈடுபட்டுள்ள தேவதூதர்கள் படையின் தளபதியாகவும் தோன்றுகிறார். அந்த அதிபதி யாரென்பதை யோசுவா அறிந்திருந்ததை அவரது பதில் காட்டுகிறது. அவர் தேவனுக்கு சமமானவர்; அதனால் முழு மரியாதையோடும் தொழுகையோடும் அவருக்குமுன் யோசுவா சாஷ்டங்கமாக விழுந்தார். யோசு 5:14; ஆதி 17:3; 2 சாமுவேல் 9:6; 2 நாளா 20:18. சேனைகளின் தேவன்தாமே ஈடுபட்டிருந்த ஒரு மிகப்பெரிய போரின் ஒரு பகுதியாக இருந்த போருக்கான இராணுவ உத்தியைப் பெற யோசுவா தயாராக இருக்கிறார்.

---

**'கர்த்தருடைய சேனையின் அதிபதி' தம் மக்களின் பாதுகாப்புக்காகச் செயல்படுகிறார் என்பதை அறிவதால் நாம் எப்படிப்பட்ட ஆறுதலைப் பெறலாம்? பெறவேண்டும்?**

# பரலோகத்தில் யுத்தம்

**அந்த யுத்தம் ஒரு மாபெரும் போரின் ஒரு பகுதியாக இருந்ததை யோசுவா அறிந்திருந்தார். தேவன்தாமே ஈடுபட்டுள்ள போரைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? வெளி 12:7–9; ஏசா 14:12-14; எசே 28:11–19; தானி 10:12-14.**

தேவன் இந்தப் பிரபஞ்சத்தில் பொறுப்புமிக்க ஜீவிகளைப் படைத்து வைத்து, அவர்களுக்கு சுயாதீனச் சித்தத்தைக் கொடுத்தார். அவர்கள் அன்புகாட்டக் கூடியவர்களாக இருப்பதற்கு அது முக்கியம். தேவ சித்தத்திற்கு இசைவாகவோ எதிராகவோ செயல்பட அவர்கள் தீர்மானிக்கமுடியும். தூதர்களில் மிகவும் வல்லமைபடைத்த லூசிபர், தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தான்; அநேக தூதர்களை தன் பக்கமாக இழுத்தான்.

ஏசாயாவும் எசேக்கியேலும் அந்த யுத்தம்பற்றிக் குறிப்பிடுகிறார்கள்; ஆனாலும் ஏசா 14உம் எசே 28உம் அதிகாரங்கள் பாபிலோன் ராஜாவையும், தீரு ராஜாவையும்பற்றிச் சொல்வதாக சில விளக்கவுரையாளர்கள் சொல்கிறார்கள். அதையும் கடந்த ஓர் உண்மை இருப்பதற்கு வேதாகமத்தில் தெளிவான குறிப்புகள் உள்ளன. பாபிலோன் ராஜா தேவனுடைய சிங்காசனத்தண்டையில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஏசா 14:12,13. தீரு ராஜா தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் காப்பாற்றுகிற கேருபீனாக ஏதேனில் வசித்ததாகச் சொல்லப்படுகிறது. எசே 28:12-15. எனவே பாபிலோனிலும் தீருவிலும் ஆட்சிசெய்த மன்னர்களுக்கு இது பொருந்தாது.

குற்றமற்றிருத்தல், 'விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம்' போன்ற வார்த்தைகள் இந்தப் பூலோக ராஜாக்கள் எவருக்கும் பொருந்தாது. எனவே, பூமியிலிருந்த பாபிலோன் மற்றும் தீரு ராஜ்யங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றை இந்த நபர்கள் சுட்டிக்காட்டவேண்டும். ஏசாயா இங்கு உவமையாக (எபிரெய வார்த்தை, *மஷால்*) பேசுகிறார்; அது அந்த வரலாற்றுப் பின்னணிக்கும் அப்பாற்பட்ட ஓர் அர்த்தத்தைக் குறிக்கிறது. இங்கு கலகம், சுயநிறைவு, பெருமைக்கு உதாரணமாக பாபிலோனின் ராஜா காட்டப்படுகிறான். அதுபோல, தீருவின் அதிபதியையும் (எசே 28:2), தீருவின் ராஜாவையும் வித்தியாசப்படுத்தி எசேக்கியேல் பேசுகிறார். எசே 28:11,12. பரலோகத்தில் அதிகாரமிக்க அந்தஸ்தில் இருந்த ஒருவனுக்கு பூமியிலிருந்த தீருவின் ராஜா ஓர் அடையாளமாகக் காட்டப்படுகிறான்.

கலகக்குணமுள்ள இந்தப் பரலோக ஜீவிகள், பூமியில் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு தடையாக இருக்கிறார்கள். தானி 10:12-14. இஸ்ரவேலருக்கு தேவன் அனுமதித்த போர்களை பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே உள்ள இந்தத் தொடர்பின் அடிப்படையில் புரிந்துகொள்ளவேண்டும். அவை எல்லாம் தேவனுக்கும் சாத்தானுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தின் பூலோக வெளிப்பாடுகள்; விழுந்துபோன ஓர் உலகத்தில் தேவனுடைய நியாயத்தையும் அன்பையும் நிலைநாட்டுவதற்காக நடைபெறுபவை.

---

**உலகத்தில் நம்மைச் சுற்றிலும், நம் சொந்த வாழ்க்கையிலும், நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற இந்தப் போராட்டத்தை எந்தெந்த வழிகளில் காண்கிறோம்?**

# கர்த்தர் யுத்தத்தில் வல்லவர்

**தேவன் யுத்தத்தில் வல்லவர் என்பதின் அர்த்தம் என்ன? யாத் 2:23-25; 12:12,13; யாத் 15:3-11.**

இஸ்ரவேலர்கள் எகிப்தில் நீண்டகாலம் தங்கியிருந்த சமயத்தில் தங்கள் முற்பிதாக்களின் தேவனை மறந்திருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனைப்பற்றிய அறிவு அவர்களுக்கு மங்க ஆரம்பித்திருந்ததை வனாந்தரத்தின் பல சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன; தங்கள் மார்க்கநடவடிக்கைகளில் அஞ்ஞான விஷயங்களையும் கலந்திருந்தார்கள். யாத் 32:1-4. எகிப்தியருடைய ஒடுக்குதலினால், கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டார்கள். யாத் 2:23-25. சரியான சமயத்தில் தேவன் அவர்களுக்காகத் தலையிட்டார்.

யாத்திராகமப் புத்தகத்தின் முதல் 12 அதிகாரங்களில் சொல்லப்படுகிற யுத்தம், மோசேக்கும் பார்வோனுக்கும் இடையே நடைபெற்ற அதிகாரப் போராட்டம் மட்டுமல்ல. பண்டைய மத்தியக்கிழக்குப் பகுதிகளின் போர் சித்தாந்தத்தின்படி, தேசங்களுக்கு இடையே நடக்கிற போர்கள் எல்லாம் அந்தந்த ஜனங்களின் தேவர்களுக்கு இடையே நடக்கிற போர்களாகக் கருதப்பட்டன. பார்வோன்மீது மட்டுமல்ல, வல்லமைமிக்க பிசாசுகளான எகிப்தின் தேவர்களுக்கு எதிராக தேவன் நியாயத் தீர்ப்பு வழங்கியதாக யாத் 12:12 சொல்கிறது. லேவி 17:7; உபா 32:17. எகிப்தின் அடக்குமுறை அதிகாரத்திற்கும் நியாயமற்ற சமுக ஒழுங்கிற்கும் பின்னாலிருந்து அவைதாம் செயல்பட்டன.

இறுதியாக, தேவன் பாவத்துடன் யுத்தம்செய்து வருகிறார். இந்தப் போராட்டத்தை நிரந்தரமாக அவர் அனுமதிக்கமுடியாது. சங் 24:8; வெளி 19:11; 20:1-4, 14. விழுந்துபோன எல்லா தூதர்களும், பாவத்துடன் கைகோர்க்கத் தீர்மானித்து, பின்வாங்க விரும்பாத எல்லா மனிதர்களும் அழிக்கப்படுவார்கள். எனவே, கானான் தேசத்தின் குடிமக்களுக்கு எதிரான யுத்தங்கள் இந்தப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டங்கள். சிலுவையில் அது உச்சக்கட்டத்தை அடைந்தது; இறுதி நியாயத்தீர்ப்பில் முடிவடையப்போகிறது. அப்போது, தேவனுடைய நியாயமும் அன்பான குணமும் நிலைநிறுத்தப்படும்.

கானானியரின் முழு அழிவுபற்றிய கருத்தை, வேதாகமக் கண்ணோட்டத்தின்படி பார்க்கவேண்டும், அதாவது, பிரபஞ்சத்தில் தீமையின் வல்லமைகளுடன் தேவன் பிரபஞ்ச அளவிலான ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார். அந்த யுத்தத்தின் முடிவைச் சார்ந்தே தேவ கனமும் குணமும் நிரூபிக்கப்படும். ரோமர் 3:4; வெளி 15:3.

மனிதர்களின் வாழ்க்கையில் பாவம் நுழைந்துவிட்டதால், யாரும் நடுநிலை வகிக்கவே வாய்ப்பில்லை. ஒன்று தேவன் பக்கம் இருக்கவேண்டும் அல்லது தீமையின் பக்கம் இருக்கவேண்டும். எனவே, இறுதி நியாயத்தீர்ப்பின் அடிப்படையில் கானானியர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

---

**இரண்டு பக்கங்களில் ஏதாவது ஒன்றில்தான் நாம் இருக்கமுடியும் என்பதை மாபெரும் போராட்டத்தின் எதார்த்த நிலை காட்டுகிறது. நீங்கள் உண்மையில் எந்தப் பக்கம் இருக்கிறீர்கள்? அதை எவ்வாறு அறியலாம்?**

# தேவன் உனக்காக யுத்தம்பண்ணுவார்

**யுத்தங்களில் இஸ்ரவேலர் ஈடுபடுவதுகுறித்து தேவனுடைய அசலான, இலட்சியத் திட்டம் என்னவாக இருந்தது? யாத் 14:13,14,25.**

அதற்குமேல் சரீரப்பிரகாரமாக தங்களால் ஒன்றுமே செய்யமுடியாது என்கிற நிலையில் இஸ்ரவேல் மக்கள் இருந்தபோது, ‘மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.’ யாத் 14:13,14. வேதாகமம் சொல்கிறபடி, அந்த உண்மையை எகிப்தியர்தாமே அறிந்திருந்தார்கள்: ‘இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்.’ யாத் 14:25.

இராணுவத் திறன்களில் பயிற்சிபெறாத, உதவியற்ற நிலையில் இருந்த இஸ்ரவேலருக்காக தேவன் அற்புதவிதமாகத் தலையிட்டதுபோலவே, யாத்திராகம அனுபவத்திலும் இஸ்ரவேலருக்காக தேவன் தலையிட்டார். இங்கு யாவே அவர்களுக்காக யுத்தம்பண்ணினார், அதுமட்டுமல்ல, இஸ்ரவேலர் யுத்தம் பண்ணவேண்டிய அவசியமிருக்கவில்லை. யாத் 14:14. தேவன் யுத்தத்தில் வல்லவர்; எப்போது யுத்தம் தேவை என்பது அவருக்குத் தெரியும். அவரே வியூகம் அமைக்கிறார்; வழிவகைகளை உருவாக்குகிறார்; நடவடிக்கையை மேற்கொள்கிறார். யாவே இஸ்ரவேலருக்காக யுத்தம்பண்ணவில்லை என்றால், அவர்கள் வெற்றிபெற சாத்தியமே இல்லை.

இந்த உண்மையை எலன் ஒய்ட் இவ்வாறு சொல்கிறார்; ‘வாக்குத்தத்த தேசத்தை அவர்கள் போர்செய்து பிடிக்குமாறு தேவன் திட்டமிடவில்லை; மாறாக, அர்ப்பணிப்பாலும், முழுக்கீழ்ப்படிதலாலும் பெறுவதை விரும்பினார்’. எகிப்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டபோது நடந்ததுபோல, அவர்களுக்காக தாம் யுத்தம்பண்ண விரும்பினார். அவர்கள் அமர்ந்திருந்து, அவரது வல்லமையான தலையீட்டைப் பார்ப்பது போதுமானதாக இருந்தது.

இஸ்ரவேலர் தேவன்மீது நம்பிக்கையுடன் இருந்தபோதெல்லாம், அவர்கள் சண்டையிட அவசியம் உண்டாகவில்லை என்று வரலாறு எடுத்துக்காட்டுகிறது. பார்க்கவும் 2இராஜா 19; 2நாளா 32; ஏசா 37.

இஸ்ரவேலர் தங்களுக்காக யுத்தம்பண்ணக்கூடாது என்பதே தேவனுடைய இலட்சியத் திட்டம். ஆனால் யாத்திரை அனுபவத்திற்குப் பிறகு, அவர்களது அவநம்பிக்கையால், கானானியருக்கு எதிரான யுத்தத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கிருக்க தேவன் அனுமதித்தார். அதேபோல, யாத்திராகம அனுபவத்திலும், எகிப்தியர்களுக்கு எதிராக அவர்கள் ஒரு வார்த்தைகூட பேச அவசியமிருக்கவில்லை; கானானைப் பிடிப்பதற்கும்கூட அவர்கள் யுத்தம்செய்ய அவசியமில்லாமல் இருந்திருக்கலாம். உபா 7:17-19.

**‘இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காமல் இருந்திருந்தால், அவர்களுடைய எதிரிகள் அவர்களுடன் யுத்தம்பண்ண அவர் அனுமதித்திருக்க மாட்டார்’. முறுமுறுப்பது இன்று நம் வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை உண்டாக்குகிறது?**

# இரண்டாவது சிறந்த தேர்வு

**யாத் 17:7-13; யோசுவா 6:15-20 ஆகிய வசனங்களில் சொல்லப்படுகிற இரண்டு யுத்தங்களுக்கும் இடையே என்ன ஒற்றுமைகளைக் காணமுடிகிறது? என்ன வேற்றுமைகள் உள்ளன?**

---

யாத்திராகம அனுபவத்திற்கு பிறகு இஸ்ரவேலர் செய்த முதல் யுத்தம்பற்றி யாத் 17இல் வருகிறது. அங்கு அமலேக்கியர்களுக்கு எதிராக இஸ்ரவேலர் போரிட்டார்கள். எகிப்தியரை வாதித்ததிலும், தங்களை விடுதலைக்கு வழி நடத்தியதிலும் தேவனுடைய மகத்துவமான வல்லமையை இஸ்ரவேலர் கண்டிருந்தார்கள். தேவனுடைய ஆதி திட்டத்தில், மற்றவர்களுக்கு எதிராக இஸ்ரவேலர் யுத்தம்பண்ணவேண்டும் என்கிற திட்டமே இல்லை. யாத் 23:28; 33:2. ஆனால் எகிப்திலிருந்து விடுதலையான சில காலத்திலேயே, வழியில் இஸ்ரவேலர் முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். யாத் 17:3. ஏன், தங்கள் மத்தியில் தேவ பிரசன்னம் இருக்கிறதா என்றுகூட சந்தேகித்தார்கள். இது எதேச்சையாக நிகழவில்லை. இஸ்ரவேலர்கள் மீண்டும் தம்மை நம்பக் கற்றுக்கொள்ளும்படி, அமலேக்கியர்கள் அவர்களைத் தாக்குவதற்கு தேவன் அனுமதித்திருந்தார்.

தேவன் தம் நியதிகளில் சமரசமாகாமல், தம் மக்கள் இருக்கிற நிலைக்கு இறங்கிவந்து, தம் இலட்சியத்திட்டத்திற்குத் திரும்பும்படி மீண்டும் மீண்டும் அவர்களை அழைத்தார்; அதாவது, தேவ தலையீட்டில் தயக்கமின்றி முழு நம்பிக்கை கொள்ளும்படி கூறினார். உண்மையில், வனாந்தர அனுபவத்திற்கு 40 வருடங்கள் கழித்துதான், போர்ச்சட்டமே கொடுக்கப்பட்டது. உபா 20. அதற்கு காரணமும் இஸ்ரவேலரின் அவநம்பிக்கைதான். புதிய சூழ்நிலைகளைப் பொறுத்து, புதிய வியூகங்கள் தேவைப்பட்டன; அந்நிலையில்தான் கானானியரை முற்றிலும் அழிக்கும்படி இஸ்ரவேலரிடம் தேவன் சொன்னார். உபா 20:16-18.

இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தம் அவசியமான ஒன்றாக மாறியிருந்தாலும்கூட, யாவேமீது மெய்ப்பற்று இருக்கிறதா என்பதற்கு ஒரு சோதனையாகவும் இருந்தது. தேவன் அவர்களைக் கைவிடவில்லை, மாறாக தம்மை முற்றிலும் சார்ந்திருப்பதன்மூலம் தம் வல்லமையை அவர்கள் காண அனுமதித்தார்.

அந்தப் போரில் இஸ்ரவேலர்களும் செயல்படவேண்டியிருந்ததை யோசுவா சொல்கிற வார்த்தைகளிலிருந்து அறியமுடிகிறது. அங்கே கானானியர்கள் இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் போரிட்டார்கள். யோசுவா 24:11. எரிகோ மதில் தேவனுடைய அற்புதத்தால் தகர்ந்து விழுந்தது, அப்பட்டணத்தின் கடின இருதயமிக்க குடிகளை இஸ்ரவேலர் போரிட்டு எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இஸ்ரவேலர் ஆயுதமேந்தி போரிட ஆரம்பித்த பிறகு, அவர்கள் யாவேயின் உதவியை எந்த நிபந்தனையுமின்றி சார்ந்திருக்க அது ஒரு வழியாக மாறியது. ஆனாலும் ஒவ்வொரு யுத்தத்தின் முடிவும் தேவனுடைய கரங்களில் இருந்ததும், தேவனுடைய வாக்குறுதிகளில் அவர்களுக்கு விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதை பொறுத்து இராணுவ நடவடிக்கையின் விளைவு இருந்ததும் எப்போதும் அவர்களுக்கு நினைவூட்டப்பட்டது. ஆனால் தீர்மானம் அவர்களது கையில்தான் இருந்தது.

# மேலும் படிக்க:

பிரபஞ்சத்தில் தேவனுடைய அதிகாரத்திற்கு எதிராக கலகம் எழுந்தபோது, ஒன்று தேவதன்மையும், மாறாபண்பும், நித்திய இயல்பும் இல்லையென்றாகி, முழுப்பிரபஞ்சத்தின் தலைமைப் பொறுப்பையும் கலகம்செய்த ஜீவிகளில் ஒருவனிடம் விட்டுக்கொடுக்க வேண்டும் அல்லது சிருஷ்டிக்கப்பட்ட அனைத்திற்கும் பரிசுத்தமுள்ள, நீதியுள்ள, அன்பான, இரக்கமிக்க ஒரு பிதாவாகத் திகழவேண்டும். இரண்டாவது சொல்லப்படுவதே நடந்ததாக வேதாகமம் கூறுகிறது; அதன் அடிப்படையில், தீமையின் வல்லமைகளுக்கும் அவரது வல்லமைக்கும் இடையே யுத்தம் நடப்பது தவிர்க்கமுடியாததாகிறது.

குழப்பமும் கலகமும் விளைவிக்கிற அனைத்துலக வல்லமைகளுடன் சம்பந்தப்பட்ட அரசியல் மற்றும் சமூக வரலாற்று வல்லமைகள் இதே துணிகர மனநிலையை யாவேக்கு எதிராக வெளிப்படுத்தியபோது, பிரபஞ்சத்தின் மகத்துவ தேவன் தலையிட்டார். அதனால் கிடைத்த இறுதி வெற்றி, அவர் யுத்தத்தில் வல்லவர் என்று சொல்ல காரணமானது; அந்த வெற்றி, நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடந்துவருகிற அனைத்துலகப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது. வெளி 20:8–10. மேலும், இஸ்ரவேலரின் தெய்வீக யுத்தங்கள் அனைத்துலகப் போராட்டத்தின் சிறு பிரதிபலிப்பு மட்டுமல்ல, பூமியின் இறுதி நியாயத்தீர்ப்புக்கு நேராகச் செல்கிற அந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது.

‘தாம் நியமித்த நேரத்தில் அத்தேசத்திற்குள் அவர்கள் செல்வதை அவர்களது சிலாக்கியமாகவும் கடமையாகவும் தேவன் ஏற்படுத்தியிருந்தார், ஆனால் அவர்கள் முழுமனதுடன் அதை அலட்சியம் செய்ததால், அந்த அனுமதி திரும்ப வாங்கப்பட்டது. போர்செய்து அந்தத் தேசத்தைப் பிடிக்கவேண்டும் என்பது அவரது நோக்கமல்ல, மாறாக, தம் கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து அதைப் பெற அவர் விரும்பினார்’.[1]

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 392.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இஸ்ரவேலரிடம் போருக்குச் செல்லும்படி தேவன் கட்டளையிட்டதைப் புரிந்துகொள்ள இந்த அனைத்துலகப் போராட்டத்தின் பின்னணி எவ்வாறு உதவுகிறது?*

2. *மாபெரும் போராட்டத்தின் நிஜம்பற்றியும், நம்மைச் சுற்றிலும் அது நடைபெறுவதுபற்றியும் திங்கள்கிழமை கேட்கப்பட்ட கேள்விக்கான பதில்களை வகுப்பில் கலந்தாலோசியுங்கள். இந்தப் போராட்டத்தில் நம்முடைய பங்கு என்ன, அதை நிறைவேற்ற எவ்வாறு முயலவேண்டும்?*

3. *நாம் அமர்ந்திருந்து, கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவதைக் காணவேண்டும் என்கிற நியதியை நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்தலாம்?*

4. *சபையில் காணப்படுகிற விவாதங்கள் மற்றும் கருத்துவேறுபாடுகளின்போது, யாரெல்லாம் நம் பக்கம் இருக்கிறார்கள் என்று காண ஆசைப்படுகிறோம். யோசுவா **5:13-15**இன் அடிப்படையில் நம் மனநிலையை எவ்வாறு மாற்றிக்கொள்ளவேண்டும்?*

# ‘உனக்கு என்ன வேண்டும்?’

**லாரி டென்ஸ்கி-ஸ்னைமேன்**

தென் ஆசியாவில் கிறிஸ்துவை அறியாத ஒரு பெரிய பட்டணத்தில் ஒரு ஊழியரும் அவரது கூட்டாளியும் கிறிஸ்தவப் புத்தகங்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்கள் அணிந்திருந்த ஆடைகளிலேயே அவர்களது மதப்பற்று தெரிந்தது. பெண்கள் முழு நீள ஆடைகளை உடுத்தியிருந்தார்கள்; ஆண்கள் நீளமாக தாடி வளர்த்திருந்தார்கள். சிலரது நெற்றிகளில் கருப்பு தழும்புகள் தெரிந்தன; அவை நீண்டநேரம் குனிந்து பிரார்த்தனை செய்ததால் வந்தவை.

ஒரு வீட்டில், ஒரு மனிதர் கோபமாக வெளியே வந்தார். “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டார். கதவைத் திறக்கவில்லை. “உங்கள் பகுதியில் ஒரு திட்டப்பணியில் ஈடுபட்டுள்ளோம், புத்தகங்களை விற்பனை செய்கிறோம். ஒரு சில நிமிடங்கள் ஒதுக்கி இந்தப் புத்தகங்களைப் பார்க்கிறீர்களா?” என்று ஊழியரான டேவிட் கேட்டார்.

“ஒரு நிமிடம் காத்திருங்கள்” என்று கடுப்புடன் பதிலளித்துவிட்டு, உள்ளே சென்றார்.

அந்த ஊழியரின் உள்ளூர் கூட்டாளியான மரியா பயந்துபோனார். “அவரைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. தன் மதத்தில் தீவிரமாக இருப்பதுபோலத் தெரிகிறது” என்று சொன்னார். “ஒருவேளை அவர் பசியோடு இருக்கலாம்” என்று டேவிட் சொன்னார். வருடத்தின் அந்தச் சமயத்தில், மதக்கடமையை தீவிரமாகப் பின்பற்றுகிறவர்கள், ஒரு மாதத்திற்கு பகலில் சாப்பிடாமல் நோன்பு இருப்பார்கள்.

அந்த மனிதர் திரும்பி வந்தார். “உள்ளே வாருங்கள்” என்று அழைத்தார். உள்ளே சென்றதும், “உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று நேரடியாகவே கேட்டார்.

டேவிட் தன் பையிலிருந்து பல புத்தகங்களை வெளியே எடுத்தார். அந்த மனிதர் ஆர்வமடைந்தார். “என் மனைவி ஒரு ஊட்டச்சத்து நிபுணர், அவருக்கு இந்தப் புத்தகங்கள் பிடிக்கும்” என்று சொல்லிவிட்டு, அவரை அழைத்து, அந்தப் புத்தகங்களைப் பார்க்கும்படி கூறினார். அவரும் அவரது மனைவியும் அந்தப் புத்தகங்களைப் பார்த்தபோது, “இந்தப் புத்தகங்கள் உண்மையிலேயே பிரயோஜனமாக இருக்கின்றன” என்று கூறினார்.

பிறகு நேரடியாகவே, “நீங்கள் யாருக்காக வேலைசெய்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“நாங்கள் செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்கள்”.

உடனே அவர் எழுந்து, நடந்துசென்றுவிட்டார். பிறகு, திரும்பிவந்து உட்கார்ந்தார். வந்திருந்தவர்ளைப் பார்த்தார். அந்த அமைதி அசௌகரியமாக இருந்தது. அவரது மனைவி பேச ஆரம்பித்தார். “என் வாடிக்கையாளர்களில் அட்வென்ட்டிஸ்டுகளும் உண்டு. அவர்கள் நல்ல மனிதர்கள். ஆனால் அவர்களைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது” என்று சொன்னார். உடனே அவரது கணவர் பதட்டமடைவதுபோலத் தெரிந்தது, பிறகு அமைதியானார்.

“உங்களிடம் என்னென்ன புத்தகங்கள் உள்ளன?” என்று அவரது மனைவி கேட்டார்.

டேவிட் தன் பையைத் திறந்து, மாபெரும் போராட்டம் புத்தகத்தை எடுத்தார். அந்தப் பெண்மணி அதை ஆர்வத்தோடு பார்த்தார். கிறிஸ்துவிடம் செல்லும் வழி, ஆசீர்வாத மலையிலிருந்து கருத்துகள் ஆகிய புத்தகங்களையும் டேவிட் காண்பித்தார். அந்த மனிதர் மீண்டும் எழுந்து, நடக்க ஆரம்பித்தார். அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கவேண்டும் என்கிற ஆர்வம் அவரிடம் காணப்பட்டது.